தமிழ்நாடு சட்டப்பேரவை.

வெள்ளிக்கிழமை, 1972 மார்ச் 10

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

பாஞ்சாலங்குறிச்சி கோட்டை

*401 வினா—திரு. க. சுப்பு : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை அகழ்ந்தெடுத்துப் பாதுகாக்க ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? செலவழிக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையை அகழ்ந்து எடுத்துப் பாதுகாக்க ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 8,500 தற்போது இதற்காக செலவழிக்கப்பட்டுள்ள தொகை ரூபாய் 7,552.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, வீரம் விளைந்த மண் என்று வரலாற்றுப் புகழ் பெற்ற பாஞ்சாலங்குறிச்சியில், ஜெய்பூர், சித்தூர் போன்றயிடங்களில் ராணுவப் பயிற்சிப் பள்ளி அமைக்கப்பட்டிருப்பதுபோல் பாஞ்சாலங்குறிச்சியிலும் ஒரு ராணுவப் பயிற்சிப் பள்ளி அமைக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்த இடம் வீரம் பொருந்தியதாக இருக்கலாமே தவிர அப்படி ஒரு பயிற்சிப் பள்ளி அமைக்க வேறுபல வசதிகள் வேண்டும், அதற்கான தன்மைகள் வேண்டும், அவை எல்லாம் அங்கு இருப்பதாகச் சொல்ல முடியாது, ஆனால் பாஞ்சாலங்குறிச்சியை கட்ட

[1972 மார்ச் 10

பொம்மன் ஆண்டான், அங்கு அவன் அரண்மனை இருந்தது. கடைசியில் அது அடியோடு அழிந்தது ஒழிக்கப்பட்டது என்று அங்கிருந்த ஒரு மேட்டை அகழ்ந்து பார்த்ததில் தொல்பொருள் ஆராய்ச்சிக்குப் பயன்படும் சிலபல பொருள்கள் கிடைத்திருக்கின்றன. ஆனால் அவ்விடம் இப்படிப்பட்ட ஒரு பள்ளி அமைக்க ஏற்றதாக இருக்காது.

திரு. சோ. அழகர்சாமி : இப்போது ஒதுக்கப்பட்ட பணத்தை வைத்துக் கொண்டு அந்த இடத்தை அகழ்ந்து பார்த்ததாகச் சொன்னார்கள். ஆனால் அங்குள்ள எல்லாயிடங்களையும் அகழ்ந்து எடுத்துப் பார்க்கவில்லை என்று சொல்லப்படுகிறதே, ஆகவே இன்னும் அதிகப்படியான நிதி ஒதுக்கி அந்த இடம் பூராவையும் தோண்டி ஆராய்ச்சி செய்வதற்கு அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அந்தப் பகுதியிலுள்ள ஒரு மேட்டுப் பகுதியை அகழ்ந்து கண்ட வகையில் அங்கு அரண்மனைத் தோட்டம், ராணியின் இருப்பிடம், திருமண மண்டபம், யானைகள் கட்டுகின்ற லாயங்கள், சில மதிள் சுவர்கள் இவைகள் மட்டும் தென்பட்டிருக்கின்றன. அவைகள் மட்டும் அகழ்ந்து காணப்பட்டிருக்கின்றன. மதில் சுவர்கள் ஓரளவிற்குப் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றன. பெருமளவில் இருக்கிறது என்று சொல்லமுடியாது. மேலும் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் அதை அகழ்ந்து பார்த்தால் வேறு பல தொல் பொருள்கள் கிடைக்குமா என்பதுபற்றி யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டம் வரும்போது அதற்கான அளவிற்கு நடவடிக்கைகள் எடுக்க அரசு முன்வரும்.

திரு எம். தேவராசன் : பாஞ்சாலங்குறிச்சி கோட்டை தொல் பொருள் ஆராய்ச்சித் துறையின் கீழ் வருகிறதா அல்லது நம் அதிகாரத்திற்கு உட்பட்டதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாநில அரசினுடைய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின்கீழ்தான் ஆராய்ந்து அகழ்ந்து காணப்பட்டிருக்கிறது.

திரு. க. சுப்பு : அகழ்ந்து எடுக்கப்பட்ட இடம் போதுமான பாதுகாப்பு இல்லாத காரணத்தினால், சுவர்கள் எல்லாம் இடிந்து விழுந்து கொண்டிருக்கின்றன. அதைப் பாதுகாப்பதற்காகவாவது அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அகழ்ந்து எடுக்கப்பட்ட இடத்தை பலரும் பார்வையிட்டு வருகிறார்கள். அதைப் பாதுகாக்கும் முயற்சிகள் எடுக்கப்பட வேண்டுமென்று குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன, தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினால். அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. கா. காளிமுத்து : பாஞ்சாலங்குறிச்சியில் ராணுவப் பயிற்சிப் பள்ளி அமைப்பதற்கு வசதி வாய்ப்பு இல்லாவிட்டாலும் அங்கு ஒரு ஆயுதப் போலீஸ் படைப் பிரிவை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆயுதப் போலீஸ் படை அமைப்பது என்பது, ஒரு பகுதியில் எப்போதும் கலவரமாக இருக்கிறது, எப்போதும் அடிக்கடி, கலவரங்கள் எல்லாம் நடைபெறுகின்றன, உடனடியாக ஆயுதப் போலீஸ் பிரிவு செல்ல வேண்டும் என்பதற்காகத்தான் அந்தயிடத்தில் வைக்கப் படுகிறது. அந்தப் பகுதி இப்போது அமைதியாக இருப்பதால் அங்கு கொண்டு போய் ஆயுதப் போலீஸ் படை வைக்க வேண்டிய அவசியமில்லை, அதற்குத் தேவையும் இல்லை.

Employment opportunities

* 402 *Q*.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Crash Programme of the Government of India for providing employment to the rural unemployed has been enforced;

(*b*) if so, the number of people employed; and

(*c*) the nature of work?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) ஆம்.

(இ) இத் திட்டம் இம் மாநிலத்தில் இரு நிலைகளில். நீலகிரி, கன்னியாகுமரி, தர்மபுரி மாவட்டங்கள் நீங்கலாக மாவட்டம் ஒன்றுக்கு 20 வட்டாரங்கள் வீதம் 10 மாவட்டங்களில் 229 வட்டாரங்களில் துவக்கப்பட்டுள்ளது. முறையே 4, 9, 16 வட்டாரங்கள் கொண்ட மேற்குறிப்பிட்ட மாவட்டங்கள் முழுவதிலுமே